**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்
**09 ஜூலை 2021 / 28 துல்கஃதா ஹிஜிரி 1442**

# <u>தியாகம் செய்வதானது வெற்றிக்கானத் திறவுகோல் ஆகும்</u>

الحَمدُ لِلَّهِ الغَنِيِّ الحَمِيدِ، وَأَشهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحدَهُ لَا شَرِيكَ لَهُ، وَهُوَ عَلَى
كُلِّ شَيءٍ شَهِيدٌ، وَأَشهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبدُهُ وَرَسُولُهُ المَبعُوثُ بِالرَّحمَةِ وَالقَولِ
السَّدِيدِ، اللَّهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحبِهِ وَسَلِّم تَسلِيمًا كَثِيرًا. أَمَّا
بَعدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُسلِمُونَ.

**அருள்மிக்க முஸ்லிமீன்களே! முஸ்லிமாத்களே! (முஸ்லிமான ஆண், பெண்களே!)**

அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளுக்கு அடிபணிந்து நடப்பதன் மூலமாகவும் அல்லாஹ் தடை செய்துள்ள விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீது ”தக்வா” (பக்தியை) ஏற்படுத்திக் கொள்வோமாக! அல்லாஹ்வின் மீது நாம் ஏற்படுத்திக் கொள்ளும் உறுதியான ”தக்வா” வாகிறது, நாம் நற்காரியங்களை ஆர்வத்துடனும் உயிரோட்டத்துடனும் தொடர்ந்து செய்வதற்குக் காரணமாக அமையும். ஆமீன்.

**சகோதர, சகோதரிகளே!**

இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் செய்த தியாகச் செயல் ஒன்றில் கவனம் செலுத்துவோமாக!

இறைத்தூதர்(ஸல்) அவர்களுக்கு தனது உடலைப் போர்த்திக் கொள்வதற்கு ஒரு துணி தேவைப்பட்டது. இதனை அறிந்த ஒரு பெண்மணி

இறைத்தூதர்(ஸல்) அவர்களுக்கு அந்தத் துணியை வாங்கிக் கொடுத்தார்கள். இறைத்தூதர்(ஸல்) அவர்கள் அதனைக் கொண்டு தன் மீது போர்த்தி இருந்த போது, ஒருவர் வந்து, அந்தத் துணியைக் கேட்டார். இறைத்தூதர்(ஸல்) அவர்களின் பரக்கத்தை (அபிவிருத்தியை, அருளை) அடைவதற்காக அவ்வாறு கேட்டார். இந்நிலையில், இறைத்தூதர்(ஸல்) அவர்களுக்கு அந்தத் துணி அவசியமாக இருந்த போதிலும் அதனை அவருக்குக் கொடுத்து விட்டார்கள். அந்த மனிதரை திருப்திப் படுத்துவதற்காக தனது சொந்தத் தேவையை இறைத்தூதர்(ஸல்) அவர்கள் தியாகம் செய்து விட்டார்கள்.

சுப்ஹானல்லாஹ்! (அல்லாஹ் பரிசுத்தமானவன்; மேன்மையானவன்). இறைத்தூதர்(ஸல்) அவர்களின் இத்தியாகச் செயலில் நாம் சிந்தனை செய்ய வேண்டும். அத்துணியைப் போர்த்திக் கொண்ட ஒரு சில நிமிடங்களில் மற்றவரைத் திருப்திப்படுத்துவதற்காக, தனக்குத் தேவை இருந்தும் கூட, தனது தேவையை ஒதுக்கி விட்டு மற்றவருக்கு அதனைக் கொடுப்பதை இறைத்தூதர்(ஸல்) அவர்கள் தேர்ந்தெடுத்துள்ளார்கள். இதுதான், வெற்றி பெற்ற மக்களின் நன்னடத்தையாகும். இவ்விதமான நன்னடத்தையைப் பற்றியும், அந்த நற்பண்புகளைப் பெற்றிருந்த அன்ஸாரி ஸஹாபாக்கள் மற்றும் முஹாஜிரீன் ஸஹாபாக்களைப் பற்றியும் அல்லாஹ் திருக்குர்ஆனின் "அல்-ஹஷ்ர்" எனும் அத்தியாயத்தின் 9-வது வசனத்தில் பின்வருமாறு கூறுகிறான்:

وَٱلَّذِينَ تَبَوَّءُو ٱلدَّارَ وَٱلْإِيمَٰنَ مِن قَبْلِهِمْ يُحِبُّونَ مَنْ هَاجَرَ إِلَيْهِمْ وَلَا
يَجِدُونَ فِى صُدُورِهِمْ حَاجَةً مِّمَّآ أُوتُوا۟ وَيُؤْثِرُونَ عَلَىٰٓ أَنفُسِهِمْ
وَلَوْ كَانَ بِهِمْ خَصَاصَةٌ ۚ وَمَن يُوقَ شُحَّ نَفْسِهِۦ فَأُو۟لَٰٓئِكَ هُمُ
ٱلْمُفْلِحُونَ ٩

பொருள்: எவர்கள் (அதாவது, அன்ஸாரிகள்) மதீனாவில் முஹாஜிர்களுக்கு முன்னரே ஈமானுடன் வீட்டை அமைத்துக் கொண்டார்களோ, அவர்கள் நாடு துறந்து தங்களிடம் குடியேறி வந்தவர்களை (அதாவது, முஹாஜிர்களை) நேசிக்கின்றனர். அன்றியும், அவ்வாறு குடியேறியவர்களுக்குக் கொடுக்கப்பட்டதிலிருந்து தங்கள் நெஞ்சங்களில் தேவைப்படமாட்டார்கள். மேலும் தங்களுக்குத் தேவை இருந்த போதிலும் தங்களை விட அவர்களையே உதவி பெறுவதற்குத் தக்கவர்களாகத் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். இவ்வாறு, எவர்கள் உள்ளத்தின் உலோபித்தனத்திலிருந்து காக்கப்பட்டார்களோ அத்தகையவர்கள் தான் வெற்றி பெற்றவர்கள் ஆவார்கள்.

தியாகம் செய்வது எவ்வளவு சிரமமான காரியம் என்பதை நாம் அறிவோம். நமது தேவையை விட மற்றவர்களின் தேவைக்கு முக்கியத்துவம் அளிப்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. நமது தேவைகளை, சுகங்களை விட்டு விடுவது கூட சிரமமான காரியம் எனும் போது, மற்றவர்களுக்கு உதவுவதற்காக, அவர்களை மகிழ்ச்சியடையச் செய்து, திருப்திப்படுத்துவதற்காக நமது தேவைகளைத் தியாகம் செய்வதென்பது எவ்வளவு கஷ்டமான காரியம் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனினும், இதுதான் வெற்றியின் பக்கம் நம்மை அழைத்துச் செல்லும் பாதையாகும்.

நமது பெற்றோர்கள் நமக்காகச் செய்கின்ற தியாகங்களின் விஷயத்திலும் இதே கருத்தை நாம் நினைவில் கொள்ள வேண்டும். பெற்றோர்கள் தமது விருப்பங்களை விட தமது பிள்ளைகளின் தேவைகளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்களாக உள்ளார்கள். தமது பிள்ளைகளுக்காக தமது நேரங்கள், சக்திகள், இரவு, பகல் அனைத்தையும் தியாகம் செய்கிறார்கள். அவர்களின் அகராதியில் சோர்வடைதல், நிராசையாகுதல், கைவிடுதல் எனும் வார்த்தைகளைக் கூட காண முடியாது. தமது பிள்ளைகள் நன்மைகளையும் வெற்றியையும் அடைய வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டே அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள்.

**முஸ்லிமான ஆண்களே! முஸ்லிமான பெண்களே!**

இம்மாதிரியான சிறந்த தன்மைகளை, அதாவது மற்றவர்களுக்காக தியாகம் செய்யும் சிறந்த பண்புகளைப் பெற்றுத் திகழுமாறு இஸ்லாம் வலியுறுத்திக் கூறுகிறது. காரணம், இத்தன்மைகள் ஒரு தனிநபரின் மகிழ்ச்சி மற்றும் வெற்றியில் மட்டும் கவனம் செலுத்துமாறு கூறவில்லை. உண்மையில், நமது சமுதாய வாழ்வில், குறிப்பாக, இச்சவால்மிக்க காலங்களில் மற்றவர்களுடன் இணைந்து வெற்றியை அடையுமாறு நமக்குப் போதிக்கின்றன. நம்மில் பலர், உதவிகள், ஆலோசனைகள், திறமைகள் ஆகியவற்றின் பால் அவசியமாக உள்ளார்கள். நாம், தியாகம் மற்றும் "ஈதார்" (அதாவது, மற்றவர்களின் நலனுக்கு முக்கியத்துவமளித்தல்) என்பவற்றின் உண்மையானப் பொருளை அறிந்தால், நமக்கு மத்தியில் காணப்படும் பலஹீனங்கள் மற்றும் குறைபாடுகளைச் சரி செய்வதற்கும், சமுதாயத்தில் சமநிலையை ஏற்படுத்துவதற்கும் நாம் முயற்சிப்போம். நமது சமுதாயத்தையும் மார்க்கத்தையும் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதற்கு இத்தியாகச் செயல்கள் அவசியமாகும் என்பதையும் உணர்வோம்.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் பின்வரும் ஹதீதின் மூலம் செய்துள்ள உபதேசத்தை நாம் நினைவில் கொள்ள வேண்டும்:

"உங்களில் எவரும் தனக்கு விரும்புவதையே தனது சகோதரனுக்கும் விரும்பாத வரை உண்மையான "முஃமினாக" (ஓரிறை நம்பிக்கையாளராக) ஆக முடியாது" (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் புகாரி ரஹ்)

மற்றவர்களின் வெற்றியானது நமது வெற்றிக்கும் காரணமாக அமையும் என்பதை மேற்கண்ட ஹதீது நினைவூட்டுகிறது. வெற்றியை அடைவதற்கு நாம் கடின முயற்சிகளையும் தியாகங்களையும் செய்வது அவசியமாக உள்ளது. வெற்றியை அடைவதற்காக எவ்வித முயற்சியையும் நாம் செய்யாத நிலையில், வெற்றி தானாக வந்து நமது கதவுகளைத் தட்டிக் கொண்டிருக்காது.

வெற்றிக்கானப் பாதைகளையும் அதற்கான வாய்ப்புகளையும் எப்போதும் தேடிக் கொண்டிருக்க வேண்டுமென்ற சிந்தனையையும் தீர்மானத்தையும் நம்மில் நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இறைத்தூதர்(ஸல்) அவர்கள் நவின்ற ஹதீது ஒன்றை இமாம் முஸ்லிம் (ரஹ்) அவர்கள் பின்வருமாறு பதிவு செய்து அறிவிக்கின்றார்கள்:

"உங்களுக்குப் பயனளிக்கும் விஷயங்களில் கவனம் செலுத்துங்கள்; அதற்காக உதவுமாறு அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்ளுங்கள்; நிராசையாகி விடாதீர்கள்"

நமது அனைத்து விவகாரங்களையும் எளிதாக்க வேண்டுமென்றும், இம்மையிலும் மறுமையிலும் நமக்கு வெற்றியை வழங்க வேண்டுமென்றும் எல்லாம் வல்ல அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவிடம் வேண்டிக் கொள்வோமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

أَقُوْلُ قَوْلِي هَذَا وَ أَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَ لَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْمُ

## இரண்டாவது பிரசங்கம்

الْحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ الْعَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّيا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَ بَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلْمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالْمُسْلِمَاتِ، الْأَحْيَاءِ مِنهُم وَالْأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا الْبَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالْمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ الْبُلْدَانِ عَامَّةً، يَارَبَّ الْعَالَمِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الْآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْإِحْسَانِ، وَإِيتَاءِ ذِي الْقُرْبَى وَيَنْهَى عَنِ الْفَحْشَاءِ وَالْمُنكَرِ وَالْبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ الْعَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِنْ فَضْلِهِ يُعْطِكُمْ، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.